DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **STC 1/2024** |
| Deposition of Witness for | : PW 8 |
| Name | : டாக்டர்.வீரபாண்டியன் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 19.02.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 19th February 2026.

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தூத்துக்குடி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உதவி பேராசியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 22.09.2015 ம் தேதி அதிகாலை 12.15 மணியளவில் நான் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது கார்த்திக் மற்றும் வினோத் ஆகியோர்கள் சிகிச்சைக்காக அழைத்து வரப்பட்டார்கள். மேற்படி நபர்களுடன் வந்தவர் குருக்கள்பட்டி அருகே மேற்படி இருநபர்களும் பைக்கில் செல்லும்போது பேருந்து மோதியதால் காயம்பட்டதாக கூறினார்கள். கார்த்திக் என்பவரை நான் பரிசோதித்தபோது அவருக்கு கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டன.

1. இடது காலில் அதிகப்படியான அசைவு (abnormal mobility) மற்றும் சிதைவு (deformity) காணப்பட்டது.

2. வலதுதொடையில் அதிகப்படியான அசைவு (abnormal mobility) மற்றும் சிதைவு (deformity) காணப்பட்டது.

3. 3x1 செமீ அளவில் வலது புருவத்தின் மேல் வெட்டுக்காயம் காணப்பட்டது.

கார்த்திக் என்பவருக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக அனுப்பிவைக்கப்பட்டார். திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் அவருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை விபரங்களை பார்த்து அவருக்கு ஏற்பட்ட 1வது காயம்கொடுங்காயம் என்றும், 2 மற்றும் 3 காயங்கள் சாதாரண காயம் என கருத்துரை தெரிவித்து காயச்சான்றிதழ் வழங்கினேன். **கார்த்திக் என்பவரின் காயச்சான்றிதழ் அசா.ஆ.,4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

அன்றைய தினமே அதிகாலை 12.25 மணியளவில் என்னிடம் சிகிச்சை வந்த வினோத்தை பரிசோதித்தபோது அவருக்குகீழ்கண்ட காயங்கள் காணப்பட்டது.

1. 5x 1 செமீ அளவிலான வெட்டுக்காயம் நெற்றியில் காணப்பட்டது.

2. வலது காலில் அதிகப்படியான அசைவு (abnormal mobility) மற்றும் சிதைவு (deformity) காணப்பட்டது.

3.வலது முட்டியில் சிராய்ப்பு காயம் காணப்பட்டது.

4. 2x1 செமீ அளவில் வலது கையில் வெட்டுக்காயம் காணப்பட்டது.

அவருக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக அனுப்பிவைக்கப்பட்டார். திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் அவருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை விபரங்களை பார்த்து அவருக்கு ஏற்பட்ட 2வது காயம் மட்டும் கொடுங்காயம் எனவும், மற்ற காயங்கள் சாதாரண காயங்கள் எனவும் கருத்துரை தெரிவித்து காயச்சான்றிதழ் வழங்கினேன். **வினோத்தின் காயச்சான்றிதழ் அசா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

கார்த்திக் மற்றும் வினோத் ஆகியோர்கள் என்னிடம் சிகிச்சைக்கு வரும்போது சுயநினைவுடன் இருந்தார்களா என்றால் கார்த்திக் சுயநினைவுடன் இல்லை. வினோத் சுயநினைவுடன் இருந்தார். கார்த்திக் மற்றும் வினோத் ஆகியோர்களை சிகிச்சைக்கு அழைத்து வந்த நபர்களின் பெயர் அ.சா.ஆ.4 மற்றும் 5 ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. விபத்து எங்கு வைத்து நடைபெற்றது என்று மேற்படி ஆவணங்களில் துலங்குமா என்றால் குருக்கள்பட்டி அருகே வைத்து

நடைபெற்றதாக துலங்கும். விபத்து நடந்த இடம் குறிப்பிட்டு கூறப்படவில்லை என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **STC 1/2024** |
| Deposition of Witness for | : PW 9 |
| Name | : திரு.கார்த்திகேயன் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 19.02.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 19th February 2026.

**எதிரி ஆஜர். எதிரிதரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி வீடியோ கான்பரன்சிங் மூலம் ஆஜராகி அளித்த சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது வட்டாரப்போக்குவரத்து அலுவலராக சென்னை தெற்கில் பணிபுரிகிறேன். இதற்கு முன்பு 23.09.2015 ம் தேதி மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை–1 ஆக சங்கரன்கோவில் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பணிபுரிந்தபோது சின்னகோவிலான்குளம் உதவி காவல் ஆய்வாளரின் வேண்டுகோள் கடிதத்தின் படி அந்த காவல்நிலையக்குற்ற எண்.112/2015 வழக்கில் சம்பந்தப்பட்ட வாகனமான TN 67 N 0892 பதிவெண் கொண்ட கனரக பயணிகள் பேருந்து என் அலுவலகம் முன்பு ஆய்வு செய்தேன். அந்த ஆய்வின்போது அதில் கீழ்கண்ட சேததங்கள் காணப்பட்டன

1. முன்பக்க பம்பர் வலது புறம் லேசாக அமுங்கியும், வளைந்தும் காணப்பட்டது.
2. முன்வலது புற முகப்பு விளக்கு சேதமடைந்து காணப்பட்டது.

3. வாகனத்தின் முன்பக்க அமைப்பின் வலதுபுறம் லேசாக அமுங்கி காணப்பட்டது.

வாகனத்தின் கால்தடைதிறன் 66 விழுக்காடாகவும், கைத்தடைதிறன் வேலை செய்யும் நிலையிலும் இருந்தது. இந்த விபத்து இயந்திரக்கோளாறினால் ஏற்படவில்லை என்று என்னால் சான்று அளிக்கப்பட்டது. **அந்த மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அதே வழக்கில் சம்பந்தப்பட்ட மற்றொரு வாகனமான TN 72 B A 8975 என்ற பதிவெண் கொண்ட இருசக்கரவாகனத்தை 09.10.2015 அன்று மதியம் 2 மணிக்கு என் அலுவலகம் முன்பு வைத்து ஆய்வு செய்தேன். ஆய்வின்போது கீழ்கண்ட சேதங்கள் காணப்பட்டன.

1. முகப்பு விளக்கு மற்றும் முன்பக்க இரண்டு திசைகாட்டி விளக்குகள் சேதமடைந்து காணப்பட்டன.
2. பின்பக்க இடது புற திசைகாட்டி விளக்கு சேதமடைந்து காணப்பட்டது
3. இடது புற Leg guard வலது பக்கம் வளைந்து காணப்பட்டது
4. வாகனத்தின் வலது புற Foot brake லேசாக காணப்பட்டது.
5. Fuel dank வலது புறம் அமுங்கி காணப்பட்டது.

வாகனம் இயக்கி பார்க்க கூடிய நிலையில் இல்லாத காரணத்தினால் நிலை ஆய்வில் கைத்தடைத்திறன் மற்றும் கால்தடைத்திறன் நல்ல நிலையில் காணப்பட்டது. இந்த விபத்து இயந்திரக்கோளாறினால் ஏற்படவில்லை என்று என்னால் சான்று அளிக்கப்பட்டது. **TN 72 B A 8975 என்ற பதிவெண் கொண்ட இருசக்கரவாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகி**றது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

என்னிடம் மோட்டார் வாகன ஆய்விற்காக அனுப்பப்பட்ட மேற்கண்ட இருவாகனங்களும் போலீசார் கஸ்டடியிலிருந்து கொண்டுவரப்பட்ட வாகனங்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சம்பவம் நடந்த இடத்திற்கு

நான் நேரடியாக சென்று மேற்படி இரு வாகனங்களையும் ஆய்வு செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி இருவாகனங்களையும் சம்பவ இடத்தில் வைத்து ஆய்வு செய்யாததால்தான் அந்த இருவாகனங்களுக்கும் இயந்திரக்கோளாறு இல்லை என்று சான்று அளித்தேன் என்றால் சரியல்ல. எனக்கு சம்பவம் நடைபெற்று 2 நாட்கள் கழித்துதான் தெரியவந்தது. மேற்படி இருவாகனங்களையும் நான் ஒரே நாளில் ஆய்வு செய்தேன் என்றால் சரியல்ல. கனரக பேருந்தை 23.09.2015 ம் தேதி ஆய்வு செய்தேன். இருசக்கரவாகனத்தை 09.10.2015 ம் தேதி ஆய்வு செய்தேன். மேற்படி பேருந்து மற்றும் இருசக்கரவாகனத்தை ஆய்வு செய்த தேதிகளுக்கு இடையில் உள்ள காலதாமதத்திற்கு காரணம் எதுவும் உண்டா என்றால் போலீசாரால் மேற்படி வாகனங்கள் காலதாமதமாக ஆய்விற்காக அனுப்பப்பட்டது. மேற்படி இருவாகனங்களுள் எந்த வாகனம் அஜாக்கிரதையாகவும், அதிவேகமாகவும் ஓட்டப்பட்டதால் விபத்து ஏற்பட்டது என்று மேற்கண்ட இருவாகனங்களின் அடிப்படையில் துலங்குமா என்றால் காலதாமதமாக விபத்தில் சமபந்தப்பட்ட வாகனங்கள் மோட்டார் வாகன ஆய்வுக்கு என்னிடம் அனுப்பப்பட்டதால் விபத்திற்கான காரணம் சரிவர அந்த அறிக்கைகளில் துலங்காது. மேற்படி இருஅறிக்கைகளையும் காவல்துறையின் வேண்டுகோளுக்கிணங்க இவ்வழக்கிற்காக நான் தயார் செய்து கொடுத்தேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**